





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# பிள்ளையந்தாதி

piLLaiyan-dhAdhi

# பிள்ளையந்தாதி

தனியன்

சீரார் தூப்புல் பிள்ளை அந்தாதி என்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணை கீழ்மொழிந்தான்
ஏரார் மறைப்போருள் எல்லாம் எடுத்த இவ்வுலகு உய்யவே
சீராகிய வரதாரியன் பாதம் துணை நமக்கே

**ஸ்ரீ தேசிகன் திருக்குமாரர் ஸ்ரீ ஸ்ரீ நயினார்ஆசாரியர் அருளிச்செய்த**

***மாமலர் மன்னிய மங்கை***
***மகிழ்ந்துறை மார்பினன் தாள்***
***தூமலர் சூடிய தொல்லருள்***
***மாறன் துணை அடிக்கீழ் வாழ்வை உகக்கும்***
***இராமானுச முனி வண்மை போற்றும் சீர்மையன்***
***எங்கள் தூப்புல் பிள்ளை பாதம் என் சென்னியதே*** [1]

சென்னி வணங்கச்
சிறு பனி சோர வெங்கண் இணைகள்
வெந்நரகங்களும் வீய வியன் கதி இன்பமேவ
துன்னு புகழுடை தூப்புல் துரந்தரன் தூமலர் தாள் மன்னிய
நாள்களும் ஆகுங்கொல்
மானிலத்தீர் நமக்கே [2]

மாநிலத்தோதிய
மாமறை மன்னிய நற்கலைகள்
ஆனவை செய்யும் அரும் பொருள் அத்தனையே
அருளும்
தூநெறி காட்டும் இராமானுச முனி தோத்திரம் செய்
ஊனமில் தூப்புல் ஐயன்
ஓர் புகழன்றி உய்வில்லையே [3]

உய்யும் வகை இல்லை
உத்தர வேதியுள் வந்துதித்த
செய்யவள் மேவிய சீர் அருளாளரை
சிந்தை செய்யும் மெய்யவன் எந்தை
இராமானுசன் அருள் மேவி வாழும் ஐயன்
இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருளன்றியே [4]

# பிள்ளையந்தாதி

அன்று இவ்வுலகினை ஆக்கி
அரும் பொருள் நூல் விரித்து
நின்று தன் நீள் புகழ் வேங்கட மாமலை மேவி
பின்னும் வென்றி புகழ் திருவேங்கடநாதன் எனும் குருவாய்
நின்று நிகழ்ந்து
மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே [5]

வித்தகன் வேதியன்
வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்
மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன் கலைகள்
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்
கைத்தவன் என்றுரைத்தேன்
கண்டிலேன் என் கடுவினையே [6]

வினைகாள் உமக்கு
இனி வேறோர் இடம் தேட வேண்டும்
எனைச்சினமேவி முன்போல் சிதைக்கும் வகையிங்கு அரிது கண்டீர்
என் எனில் இராமானுச முனி இன்னுரை சேரும்
தூப்புல் புனிதன்
என் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே [7]

பொருந்திப் புவிதனில்
பொய் வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள்
இருந்து நரகின் இடர் கெடும் ஆற்றை அறிகின்றிலீர்
பொருந்தும் பொருள் ஒன்று கேளீர்
பொங்கும் இவ்விடர்க் கடற்கு வருந்தாது
தூப்புல் மா பூருடன் பாதம் வணங்குமினே [8]

வணக்கம் ஒடுக்கம்
வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும்
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் மிஹந்து நிற்கும்
குணக் குலமோங்கும் இராமானுசன் குணம் கூறும்
தூப்புல் அணுக்கனைப் பிள்ளை தனை
அரணாக அடைபவர்க்கே [9]

# பிள்ளையந்தாதி

அடைபவர் தீவினை மாற்றி
அருள் தரும் தூப்புல் ஐயா
இடர் தரும் இப்பிறவிக் கடல் தன்னில் அமிழ்ந்த என்னை
கடையற பாசம் கழற்றி நின் தாளிணை காணோம் வண்ணம்
உடையவனே அருளாய்
உணர்ந்தார் தங்கள் கற்பகமே [10]

கற்பகமே என்று
காசினியோரை கதிக்க மாட்டேன்
வெற்பிடையே நின்று வெந்தவ தீயிலும் வேவமாட்டேன்
பற்பல கலைவல்ல பாவலனே பத்தரேத்தும் தூப்புல்
அற்புதனே அருளாய்
அடியேனுக்கு அரும் பொருளே [11]

பொருளான தொன்றும்
என்னில் பொருந்தாததும் அன்றி அந்தோ
மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றி நின்றேன்
தெருளார் மறைமுடி தேசிகனே
எங்கள் தூப்புல் தேவே அருளாய்
இனி எனக்கு உன் அருளே அன்றி ஆறில்லையே [12]

ஆறாக எண்ணும்
அருங்கருமம் ஞானம் காதல் கொண்டு
வேறாக நிற்கும் விரகெனக்கில்லை விரத்தி இல்லை
தேறாது திண்மதி சீரார் கதியிலும் செம்பொன் மேனி
மாறாத தூப்புல் மாலே
மறவேன் இனி நின் பதமே [13]

நின் பதம் தன்னிலும்
நேரே எனக்கில்லை அன்பு கண்டாய்
நின் பதம் ஒன்றியவன் பரிலும் நேசமில்லை அந்தோ
என் படி கண்டு இனி என் பயன் ஏதமில் தூப்புல் எந்தாய்
உன்படியே அருளாய்
உதவாய் எனக்கு உன் அருளே [14]

# பிள்ளையந்தாதி

உன் அருள் அன்றி
எனக்கொரு நற்றுணை இன்மையினால்
என்னிரு வல்வினை நீயே விலக்கி இதம் கருதி
மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே
பொன் அருளால் அருளாய்
புகழ் தூப்புல் குல விளக்கே [15]

விளக்காகி
வேங்கட வெற்பினில் வாழும் விரை மலராள்
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்தும் உனது அடியார்
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலும் தூய்மை எண்ணிக்
களக்காதல் செய்யும் நிலை கடியாய்
தூப்புல் காவலனே [16]

*காவலர் எங்கள்*
*கிடாம்பிக் குலபதி அப்புளார் தம்*
*தேமலர் சேவடி சேர்ந்து பணிந்து*
*அவர் தம் அருளால் நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற*
*நம்பி காவலர் தூப்புல் குலத்தரசே*
*எம்மை காத்தருளே* [17]

*அருள் தரும் ஆரண தேசிகனே - எங்கள் தூப்புல் தேவே*
*வரு கவி தார்க்கிக சிங்கமே*
*வாதியர் வாழ்வறுத்தாய்*
*இரு கையும் கூப்பி உரைக்கும் இவ்விண்ணப்பம் ஒன்று கேளாய்*
*உருவ எனக்கருளாய்*
*எண்ணும் உள்ளம் உன் தொண்டரையே* [18]

*தொண்டர் உகக்கும் துணையடி வாழி*
*நின் தூமுறுவல் கொண்ட முகம் வாழி*
*வாழி வியாக்கியா முத்திரைக்கை*
*வண் திருநாமமும் வாழி*
*மணிவட முப்புரி நூல் கொண்டசீர் தூப்புல் குலமணியே*
*வாழி நின் வடிவே* [19]

# பிள்ளையந்தாதி

*வடிவழகார்ந்த*
*வண் தூப்புல் வள்ளல் மென் மலர் அடிமேல்*
*அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன்*
*திடமுடன் ஈதை தினந்தொறும் ஆதரித்தோதும் அன்பர்*
*முடியிடை நேர்படும்*
*தூப்புல் அம்மான் பத மாமலரே* [20]